சேலம் மத்திய மாவட்டம் வடக்கு சட்டமன்ற தொகுதியில் ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கை. பாக முகவர்கள் கூட்டம் நடைபெற்றது புதிய உறுப்பினர் சேர்க்கை படிவத்தை பகுதி செயலாளர். சி – பிரகாசிடம் மாவட்ட கழக செயலாளர். அமைச்சர். இரா. இராஜேந்திரன் வழங்கினார். உடன் மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே. சுபாசு. மு. கார்த்திகேயன். தொகுதி பார்வையாளர்கள். பி.ஏ.ஆர். இளங்கோவன். இ.ஜி.சுகவனம். டாக்டர். விவேக். தலைமைச் செயற்குழு உறுப்பினர். கே.டி. மணி. பொதுக்குழு உறுப்பினர்கள். பூபதி, சா. சுப்பிரமணி. மாநகர செயலாளர். பா. ரகுபதி ஆகியோர் உள்ளனர்.

தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை! முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் நல உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

திருச்சி சிவா எம்.பி. – அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை!

கிருஷ்ணகிரி, ஜூன். 26–

கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் குடிநீர் தாகத்தை தீர்க்க ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தை வழங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகே கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நலத் திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகில் மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் வேல்மணி வரவேற்புரை ஆற்றினார்கள்.

ஒன்றிய கழக செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன், சாந்தமூர்த்தி, அறிஞர், ராஜேந்திரன், நரசிம்மன், குணவசந்தரசு , எக்கூர் செல்வம் , ரஜினி செல்வம், குமரேசன் பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கட்டப்பன் பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கழக துணை பொது செயலாளர், நாடாளுமன்ற மாநிலங்களவை திமுக குழுத் தலைவர் திருச்சி .சிவா மற்றும் தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும் கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புறை ஆற்றினார்கள்.

இந்த கூட்டத்தில் பேசிய துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா:

நாம் இந்தி மொழியை எதிர்க்கிறோம் என்றால் அந்த மொழியின் ஆதிக்கத்தை தான் எதிர்க்கிறோம், எங்களின் தாய்மொழி உலகிலேயே மூத்த மொழிகளில் முதன்மையான மொழி 5400 ஆண்டுகளுக்கு முன்பு இரும்பை பயன்படுத்திய தமிழன் என்ற வரலாறு நமக்கு உள்ளது அதை ஆராய்ச்சி ரீதியாக கண்டுபிடித்துள்ளோம், ஆதிச்சநல்லூர் தொடங்கி சிவகளை, கொற்கை வழியாக கீழடி வரை கண்டுபிடித்து வைத்திருப்பதை மறைக்க முயல்கிறது ஒன்றிய பாஜக அரசு. அவர்களுக்கு தமிழ்நாடு என்றால் ஒரு கசப்பு. கீழடியின் ஆய்வுகளை ஏன் ஒன்றிய அரசு ஏற்க மறுக்கிறது என்று இப்பொழுது புரிகிறது அங்கு கண்டுபிடிக்கப்பட்ட 17 ஆயிரத்து 900 பொருட்களில் 1500 மண் கலயங்கள் கிடைத்திருக்கிறது. அந்த மண் கலயங்கள் எல்லாம் கருப்பு சிவப்பு வண்ணத்தில் இருக்கிறது, அந்த கருப்பு சிவப்பு பார்த்தால் அவர்களுக்கு அச்சமாக இருக்கிறது. உலகையே வென்ற அலெக்சாண்டரால் தமிழகத்திற்குள் நுழைய முடியவில்லை இந்தியாவை ஆண்ட மௌரியர்களால் தமிழ்நாட்டை ஆள முடியவில்லை, டெல்லி இந்தியா முழுவதும் வித்தை காட்டலாம் ஆனால் தமிழ்நாட்டில் அவர்கள் பாட்ஷா பலிக்காது என்பதை வருகின்ற தேர்தல் உணர்த்தும். இந்தியா என்கின்ற இந்த நாடு தானாக உருவாகியது இல்லை இந்தியா என்பது மாநிலங்களின் தொகுப்பு அதைத்தான் அரசியல் சட்டம் சொல்கிறது. மாநிலங்களின் ஒன்றியம் தான் இந்தியா. வெங்காயத்தைப் போல் மாநிலங்களை ஒவ்வொன்றாக தனித்தனியாக எடுத்தால் இந்தியா என்ற அமைப்பே இல்லை இந்தியா என்பது ஒரு வெங்காயத்தின் அமைப்புகள் போல மாநிலங்களின் கூட்டமைப்பு இதை புரிந்து கொள்ள வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ. ஜி.சுகவனம், மாநில மகளிர் அணி ஆலோசனை குழு உறுப்பினர் காஞ்சனா கமலநாதன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன், மாநில தொழுச துணை செயலாளர் கிருஷ்ணன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் கேவிஎஸ் சீனிவாசன், கிருஷ்ணகிரி தொகுதி பார்வையாளர் தேவகுமார் மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி , சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன் பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன்,நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன் , மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, கழக பிரமுகர் பி.டி.அன்பரசன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத்தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் இந்நாள் , முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு வட்டக்கிளை செயலாளர்கள் BLA 2,BLC தோழர்கள், மற்றும் கழக முன்னோடிகள் பெண்கள் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி நன்றி உரையாற்றினார்.